**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்றக்கூட்டம்**
**நாள். 28.02.2020 வெள்ளிக்கிழமை நேரம் : காலை 10.00 மணி**

---

## நகர்மன்றக்கூட்டம் : நாள். 28.02.2020

**மன்றப்பொருள்:1**

இந்நகராட்சி அலுவலக சொத்துவரி, தொழில்வரி சம்பந்தமாக ஸ்பைரல் பைண்டிங், கார்ட் பைண்டிங், உள் பணியாளர்கள், வெளிப்பணியாளர்கள், வருகை பதிவேடு பைண்டிங் செய்த வகையில் பாரதி அச்சகம் உசிலம்பட்டி அவர்களுக்கு தொகை ரூ.1100/—ஐ வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)—ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண். 957/2014/எச்.1)

---

**மன்றப்பொருள்—2**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு—11, வடகாட்டுப்பட்டியில் அமைந்துள்ள பாப்பாபட்டி ஸ்ரீ ஒச்சாண்டம்மன் கோவில் திருவிழாவிற்கு சுகாதார விடுதி, பந்தல் மேடை அமைத்தல், நீர், மோர் மற்றும் பானைகரம் பொதுமக்களுக்கு வழங்கவும், மேற்படி பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 60,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்
2.அவசர அவசியம் கருதி பிரிவு 15—ன்கீழ் பணிகள் மேற்கொண்டதையும் அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 384/2020/எச்.2

---

**மன்றப்பொருள்—3**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் உள்ள மழைநீர் வடிகால்வாய் பற்றிய வரைபடங்கள் சமர்ப்பிக்க மதுரை மாவட்ட ஆட்சி.ததலைவர், அவர்களின் செயல்முறை ந.க.எண். அ3/169/2020, நாள். 18.02.2020 அன்று தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் அவசர அவசியம் கருதி அப்பணியை மேற்கொண் HI-TECH Builders நிறுவன உரிமையாளர் திரு. சி.சுதாகர் என்பவருக்கு ரூ. 12,000/— வழங்குவதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்
2.அவசர அவசியம் கருதி பிரிவு 15—ன்கீழ் பணிகள் மேற்கொண்டதையும் அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்—4</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ. 5.20 இலட்சத்திற்கு மன்றத் தீர்மானம் எண்.16, நாள். 31.01.2020—இல் அனுமதி பெற்றதன் அடிப்படையில் 19.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1). M/s. மகாவீர் எலக்ட்ரோ கன்ரோலர்ஸ் நிறுவனம் மதிப்பீட்டை விட 0.55 குறைவு
2). M/s. முகேஷ் மார்க்கெட்டிங் நிறுவனம் மதிப்பீட்டை விட 2.62 % அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. மகாவீர் எலக்ட்ரோ கன்ட்ரோலர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்
2.குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. மகாவீர் எலக்ட்ரோ கன்ட்ரோலர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்—5</u>**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான 6000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு தண்ணீர் லாரி உள்ளது. அதன் மூலம் குடிநீர் கிடைக்கப்பெறாத பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், பொது கழிப்பிடங்களுக்கு நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றம் செய்யவும், குடிநீர் லீக் பார்க்கப்படும்போது தேவையற்ற குடிநீரை வெளியேற்றவும் போன்ற பயன்பாட்டிற்கு டீசல் இஞ்சின் தேவைப்படுகிறது. இதற்கான உத்தேச மதிபபீட்டுத்தொகை ரூ. 70,000/—க்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை குடிநீர் விநியோக நிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்—6</u>**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையம் பேருந்து நிலைய வளாகத்திற்குள் உள்ள நீர்த்தேக்கத்தொட்டிக்கு மற்றும் நீதிமன்ற வளாகத்திற்குள் உள்ள நீர்த்தேக்கத்தொட்டிகளுக்கு காவல்பணி பார்ப்பதற்கு ஆட்களை சப்ளை செய்ய ரூ. 3.60/— இலட்சத்திற்கு மன்றத்தீர்மானம் எண்.18, நாள். 31.01.2020—ல் அனுமதி பெற்றதன் அடிப்படையில் விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

1). திரு. ஆர்.ரவிக்குமார், ஒப்பந்ததாரர் என்பவர் நாள் ஒன்றுக்கு நபரை சப்ளை செய்ய— ரூ.324
2). திரு. பி.காட்டுராஜா ஒப்பந்ததாரர் என்பவர் நாள் ஒன்றுக்கு நபரை சப்ளை செய்ய— ரூ.327
3). M/s. HI-Tech Builders ஒப்பந்ததாரர் என்பவர் நாள் ஒன்றுக்கு நபரை சப்ளை செய்ய— ரூ.329

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஆர்.ரவிக்குமார் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.ரவிக்குமார் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்–7</u>**

இந்நகராட்சியின் ஜனவரி 2020–ம் மாத ஒப்பந்தப்பட்டியலில் பிடித்தம் செய்த 2 சதவிகிதம் சரக்கு மற்றும் சேவைவரியினை ஒப்பந்தப்பட்டியலின்படி தொடர்புடைய ஒப்பந்ததாரர் பெயரில் இணையவழியில் GSTR-7–ஐ பதிவேற்றம் செய்து உரிய அரசுத்தலைப்பில் தனித்தனியாக வருவாய் மற்றும் குடிநீர் நிதி SBM நிதிகளக்கு பதிவேற்றம் செய்யப்பட்டமைக்கு உரிய செலவினம் ரூ. 3,490/– (ரூபாய் மூன்றாயிரத்து நானூற்று தொன்னூறு மட்டும்) சம்பந்தப்பட்ட தனியர் வருமான வரி பயிற்றுநர் திரு. முகம்மது வாஹித் அவர்களுக்கு வழங்கலாம் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,<br>
உசிலம்பட்டி நகராட்சி.